# செய்தி மடல்

(சென்னை கொங்கு நண்பர்கள் சங்க வெளியீடு)

திருவள்ளுவர் ஆண்டு 2040 (சித்திரை - வைகாசி) மே 2010 ஏர்-25, உழவு-5, விலை ரூ.10.00

ஆசிரியர், வெளியிடுபவர் :
BRT.சென்னியப்பன்
34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
போன் : 28351244 / 28352744

## கொங்கு நண்பர்கள் சங்கம்

"வெள்ளி விழா இல்லம்"
34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.
Ph : 28351244
28352744

"கொங்கு நாடு இல்லம்"
27, அம்மையப்பன் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014
Ph : 28350432 /
Fax : 044-28351244

| | |
|---|---|
| தலைவர் | : BRT.சென்னியப்பன் |
| துணைத்தலைவர் | : ஈ.ஆர்.ஈஸ்வரன் |
| செயலாளர் | : பரணி கே. பாலசுப்பிரமணி |
| இணைச்செயலாளர் | : எஸ்.ஆர்.இராஜேந்திரன்<br>கே.சி.பிரபாகரன் |
| பொருளாளர் | : ஆர். செல்வராஜ் |
| தணிக்கையாளர் | : ஆர். பாலச்சந்திரன் |

செயற்குழு உறுப்பினர்கள் :

| | |
|---|---|
| எம். பொன்னுசாமி | செல்வி ஃபீட்ஸ் கே.கந்தசாமி |
| கே.ஏ.கணபதி | பி.ரவி |
| கே.ராஜாமணி | பி.இராமசாமி |
| வி.பி.செங்கோட்டுவேல் | பி.கே.ஈஸ்வரமூர்த்தி |
| ஆர். சண்முகவேல் | Dr.டி.எஸ்.செல்வராஜ் |
| மு. கார்த்திக் | Dr.எஸ்.அசோகன் |
| கே.கே. ரமேஷ் | N.பாலசுப்பிரமணியம் |
| ஜெ.ஆனந்த் | பி.அருள் |
| வி.பி.வீரப்பன் | எஸ்.சிவசாமி |
| ஆர்.இளங்கோ | Dr.மணிமேகலை புஷ்பராஜ் |
| கே. வரதராஜன் | உத்தமி பொன்னுசாமி |

## இந்த இதழில்


பொருளடக்கம் - 1
தலையங்கம் - 2
செயலாளர் அறிக்கை - 3
எத்திசை நோக்கினும் - 6
திருமண மாலை - 7
மணமகள் தேவை - 9
வானம் தொடலாம் வாங்க - 10
உடல் நடத்தோடு செழிக்கட்டும் - 11
ஆய்வு - 12
பிறந்த நாள்விழா - 15
வாழ்த்துகிறோம் - 19
அமராவதி நீர்ப்பாசனம் - 20
மணமகள் தேவை - 23
மணமகன் தேவை - 28

### ஆசிரியர் குறிப்பு

வாசகர்களிடமிருந்து கதை / கவிதை / கட்டுரை / செய்தி மடல் பற்றிய விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பு. கட்டுரை இன முன்னேற்றத்திற்கும், மேம்பாட்டிற்கும் உதவும் வகையில் இருந்தால் சாலச்சிறந்தது. வரும் கதை, கட்டுரை முதலியவற்றை வெளியிடுவதோ அல்லது சுருக்குவதோ ஆசிரியருக்கு முழு உரிமை.

# தலையங்கம்

அன்பார்ந்த கொங்கு சொந்தங்களே ! வணக்கம்.



இந்த ஆண்டு கொங்கு சொந்தங்களுக்கு நல்ல ஆண்டு போல் தோன்றுகிறது. பல நன்மைகள் நடந்து கொண்டிருக்கின்றன. கொங்கு மண்டலத்திற்கு உலகத் தமிழ்மாநாடு வந்து பல கட்டமைப்பு வசதிகள் கோவையில் நடந்து கொண்டிருக்கின்றன. அரசாங்கத்தின் கவனம் கொங்கு மண்டலத்தின் பக்கம் திரும்பியிருக்கிறது.

கடந்த 10 ஆண்டுகளாக சென்னையில் உள்ள நம் குல வேந்தன் தீரன் சின்னமலையின் சிலைக்கு அரசு மரியாதை வேண்டும் என்று சங்கத்தின் சார்பாக கோரிக்கை தொடர்ந்து வைத்து வந்தோம். இந்த ஆண்டு தான் அரசாங்கத்தால் அது நிறைவேற்றப்பட்டு தமிழகஅரசின் துணை முதல்வர், தீரன் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்த அரசாங்கம் கொங்கினத்திற்குச் செய்த மரியாதையாகவே இதை நாம் எடுத்துக் கொள்வோம். அரசாணை பிறப்பித்த தமிழக முதல்வருக்கும், மரியாதை செய்த துணை முதல்வருக்கும், உறுதுணையாக இருந்த அமைச்சர் பெருமக்களுக்கும் சங்கத்தின் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். தீரன் சின்னமலை சிலை இருக்கின்ற அந்த இடத்தைப் பராமரித்து அழகுபடுத்துவதற்கு அரசு அனுமதியைப் பெற்றுச் செயலாற்ற முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம்.

தீரன் சின்னமலை பிறந்த நாளுக்கு அடுத்தநாள் 18-04-2010 அன்று தீரன் சின்னமலை மாளிகை திறப்புவிழா மிகச்சிறப்பாக நடத்தினோம். சிறப்பாக நடத்திய நம் செயற்குழுவுக்கும், விழாவில் கலந்துகொண்ட அனைத்துச் சொந்தங்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் விரிவாக திறப்பு விழா நிகழ்ச்சியைப் பற்றி அடுத்த இதழில் தெரிவிக்கிறேன். 10ம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு முடிவுகள் வருகின்ற நேரம். நம் குழந்தைகள் அனைவரும் நல்ல மதிப்பெண்கள் வாங்க வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

நன்றி !

அன்புடன்
பி.ஆர்.டி.சென்னியப்பன்
தலைவர்

❖❖❖❖

# செயலாளர் அறிக்கை

அன்புடையீர், வணக்கம்.



வெள்ளையரைக் கதிகலங்கச் செய்த மாவீரன் தீரன் சின்னமலை வீரம் விளையும் மண் தமிழ்மண் என்பதை உலகிற்கு உணர்த்திப் பெருமை கொண்டவர். கொங்கு நாட்டு வரலாற்றில் ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போரிட்டு தாய்நாட்டைக் காக்க இன்னுயிர் ஈந்த வீர மறவன் தீரன் சின்னமலை. வீரம், தியாகம், நாட்டுப்பற்று, உழைப்பு போன்ற அரிய குணங்கள், ஒருங்கே பெற்று, வெள்ளையர்களை மூன்று போர்களில் வென்று, தன்மானத்துடன் மரணத்தைத் தழுவிய மாவீரன் தீரன்சின்னமலை, கொங்கு நாட்டிற்குப் பெரும் பெருமை சேர்த்தவர். கொங்கு சமுதாய மக்கள் அவரது நினைவையும், புகழையும் என்றும் போற்றி வருகின்றனர்.

கொங்கு நண்பர்கள் சங்கம் தீரன் சின்னமலையின் பிறந்த நாள் (17-04-1756) மற்றும் மறைந்த நாள் (31-07-1805 - ஆடிப்பதினெட்டு) – இந்த இரு தினங்களையொட்டி ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் மாதம் 17ம் தேதியன்றும், ஜீலை மாதம் 31 ஆம் தேதியன்றும் கிண்டியில் அமைந்துள்ள தீரன் சின்னமலையின் திருவுருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செய்து வருகிறது. தீரன் சின்னமலை பிறந்த நாள் விழாவை அரசு விழாவாக அறிவித்து தமிழக அரசு 16-04-2010 அன்று ஆணை பிறப்பித்தது. 17-04-2010 அன்று, தீரன் சின்னமலை 255 வது பிறந்த நாள் அன்று அவருடைய திருவுருவச்சிலைக்கு தமிழக அரசு சார்பில் துணைமுதல்வர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களும், தமிழக அமைச்சர்கள் மாண்புமிகு பொங்களூர் பழனிசாமி, மாண்புமிகு வெள்ளக்கோவில் சாமிநாதன், மத்திய இணை அமைச்சர் மாண்புமிகு காந்திச்செல்வன், அரசு கொறடா திரு. சக்கரபாணி, MLA., சென்னை மாநகராட்சி மேயர் திரு.மா.சுப்பிரமணியம் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செய்தனர். கொங்கு நண்பர்கள் சங்கம் சார்பில் அமைச்சர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்படடது. கொங்கு நாடு முன்னேற்றக் கழகத்தலைவர் திரு. பெஸ்ட் எஸ்.இராமசாமி, கொங்கு வேளாளக் கவுண்டர்கள் பேரவைத் தலைவர் திரு. திருச்சி தேவராசன்,

திரு.விடியல் சேகர் MLA, தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பனார், மூத்தவழக்கறிஞர் இரா.காந்தி, முன்னாள் காவல்துறை கூடுதல் தலைவர் திரு. V.C.பெருமாள் உட்பட பெரும்திரளானோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். கொங்கு நண்பர்கள் சங்க நிர்வாகிகள் மற்றும் கொங்கு சொந்தங்கள் தீரன் சின்னமலை சிலைக்கு மலர் அஞ்சலி செலுத்தினர்.

தீரன்சின்னமலையின் புகழை, என்றென்றும் போற்றும் விதமாக சென்னை இராயப்பேட்டையில் சங்கத்தின் சார்பாகக் கட்டிமுடிக்கப்பட்டு, 18-04-2010 அன்று திறப்பு விழா கண்ட எழில்மிகு மாளிகைக்கு, செயற்குழுவில் எடுக்கப்பட்ட முடிவின்படி, "**தீரன் சின்னமலை மாளிகை**" எனப் பெயரிடப்பட்டுள்ளது. இவ்விழாவைப் பற்றிய செய்திகளும், கொங்குச் சான்றோர்கள் ஆற்றிய உரைகளும், படங்களும் அடுத்தமாத செய்தி மடலில் இடம் பெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தீரன்சின்னமலையின் பிறந்த நாள் விழாவை அரசு விழாவாக அறிவித்த தமிழக அரசுக்கும், திருவுருவச்சிலைக்கு அரசு சார்பில் மாலை அணிவித்த அமைச்சர்களுக்கும் சங்கத்தின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்த அனைத்து கொங்குச் சொந்தங்களுக்கும் என் அன்பு கலந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தீரன் சின்னமலை மாளிகை நிதிக்கு, இதுவரை நன்கொடையளித்த பேருள்ளம் கொண்ட கொங்கு பெருந்தகைகள் அனைவருக்கும் சங்கத்தின் சார்பில் உளம் நிறைந்த நன்றிப் பெருக்கினைத் தெரிவித்துக்கொள்வதோடு, இதுவரை நன்கொடையளிக்காத சங்க உறுப்பினர்கள் தங்களால் இயன்ற தொகையை சங்கத்திற்கு விரைந்து அனுப்பிவைத்து சங்க வளர்ச்சியில் பங்கு கொள்ள அன்போடு வேண்டுகோள் வைக்கிறேன்.

நன்றி !

அன்புடன்
பரணி. கே.பாலசுப்பிரணி
செயலாளர்

❖❖❖❖

# கொங்கு நண்பர்கள் சங்கம்

கட்டட நிதிக்கு நன்கொடை அளித்தவர்கள் (சென்ற இதழ் தொடர்ச்சி)

| வ.எண். | உ.எண். | பெயர் | தொகை ரூபாய் |
|---|---|---|---|
| | | சென்ற இதழ் வரை மொத்த தொகை | 41,00,943 |
| 904 | 3300 | P.C.துரைசாமி (சக்திமசாலா நிறுவனம்) | 5,00, 000 |
| 905 | 3131 | அட்லஸ் M.நாச்சிமுத்து | 3,00,000 |
| 906 | 204 | M.பொன்னுசாமி (செயற்குழு உறுப்பினர்) | 3,00,000 |
| 907 | 5 | R.காந்தி, மூத்த வழக்கறிஞர் | 50,000 |
| 908 | 1970 | N.P.இசையழகன் } இசை & கோ | 25,000 |
| | 2935 | V.R.பாலசுப்பிரமணியம் } இசை & கோ | |
| 909 | 632 | சிலம்பொலி செல்லப்பனார் | 20,000 |
| 910 | 2938 | Dr.S.அசோகன் (செயற்குழு உறுப்பினர்) | 15,000 |
| 911 | 2685 | Dr.N.வேலுசாமி | 10,000 |
| 912 | 920 | K.வேலுசாமி | 10,000 |
| 913 | | N.சுமதி (ராம்ராஜ் காட்டன்) | 10,000 |
| 914 | | S.ராமசாமி (ராம்ராஜ் காட்டன்) | 10,000 |
| 915 | | R.கண்ணம்மாள் (ராம்ராஜ் காட்டன்) | 10,000 |
| 916 | 3289 | K.R.நாகராஜன் (ராம்ராஜ் காட்டன்) | 10,000 |
| 917 | | A.ஆர்த்திகா (ராம்ராஜ் காட்டன்) | 10,000 |
| 918 | | B.R.பரமேஸ்வர் (ராம்ராஜ் காட்டன்) | 10,000 |
| 919 | | B.ராஜலஷ்மி (ராம்ராஜ் காட்டன்) | 10,000 |
| 920 | | மூர்த்தி (ராம்ராஜ் காட்டன்) | 10,000 |
| 921 | | M.ரூபா (ராம்ராஜ் காட்டன்) | 10,000 |
| 922 | | K.A.செல்வகுமார் (ராம்ராஜ் காட்டன்) | 10,000 |
| 923 | | S.சித்ரா (ராம்ராஜ் காட்டன்) | 10,000 |
| 924 | | A.கணபதி (ராம்ராஜ் காட்டன்) | 10,000 |
| 925 | | L.செல்வி (ராம்ராஜ் காட்டன்) | 10,000 |
| 926 | | M.குமரேசன் (ராம்ராஜ் காட்டன்) | 10,000 |
| 927 | | K.நவமணி (ராம்ராஜ் காட்டன்) | 10,000 |
| 928 | | M.கணேஷ் (ராம்ராஜ் காட்டன்) | 10,000 |
| 929 | | G.சந்திரா (ராம்ராஜ் காட்டன்) | 10,000 |
| 930 | | R.சிதம்பரநாதன் (ராம்ராஜ் காட்டன்) | 10,000 |
| 931 | | C.சுமதி (ராம்ராஜ் காட்டன்) | 10,000 |
| 932 | | சுப்பிரமணியம் (ராம்ராஜ் காட்டன்) | 10,000 |
| 933 | | V.வசந்குமார் | 8,000 |
| | | மொத்தம் | 55,38,943 |

# எத்திசை நோக்கினும்

கருங்கல்லில் செதுக்கிய
கற்சிலை நீயா?
ஐம்பொன் உருக்கியுருக்கி
அழகாக வார்த்திட்ட
பொற்சிலையும் நீயா?
பாலும் தேனும் பொழிந்து
பலநூறு நீராட்டு
நாங்கள் செய்திருக்க
ஆங்கு எமைப் பார்த்திருப்பது நீயா?

வண்ணங்கள் கண் பறிக்க
வரைந்திருந்த ஓவியங்கள் மீது
சரம் சரமாய் மாலைகள்
சாற்றி யாம் மகிழ்ந்திருக்க
குறுஞ்சிரிப்பு சிரித்தபடி
நின்றிருப்பது நீயா?
பாங்காக மலர்பரப்பிய
பீடத்தில் அமர்த்திய
பீபி மஞ்சள் நீயா?
பசுஞ்சாணம் சிறிதே
பிடித்து வைத்ததில்
அருகம்புல் சாற்றியாங்கள்
மகிழ்வது நோக்கியிருப்பது நீயா?
பச்சை வைரமண் மாணிக்கம்
பதித்த பொன்னாபரணமும்
பளிச்சிடும் தலைக்கிரீடமும் நீயா?
பட்டும் பளபளக்கும்
பீதாம்பரங்களும் அணிவித்து
மகிழ்ந்திருக்க எம்முன்பாக
காட்சியளிப்பது நீயா?
உலகத்து மலர்கள் யாவையும்
உன்னதமாகத் தொடுத்தெடுத்து
அழகுற சாத்தியும்
அருகிலே தொங்கவிட்டும்
வாசனைத் திரவியங்கள்
வகைக்கொன்றாய் தூவியிருப்பது
பார்த்திருப்பது நீயா?
கற்கண்டும் புதுநெய்யும்
குங்குமப்பூவும் சேர்த்துப்
பலருசியாய்ப் பண்டங்கள்
பார்த்துச் சமைத்து நாங்கள்
படைத்திருக்க அன்போடு
பசியாறியது நீயா?
பசும்புல்லில் பால்பிடித்து
படங்காட்டும் கதிர்மணிகளில்
பூந்தென்றல் காற்றில்
நிறங்காட்டும் மலர்க் கூட்டத்தில்
திறங்காட்டும் காய்கனிகளில்
தென்னை இளநீரில்
மலர்ந்து ஒளிந்திருப்பது நீயா?
முகிழ்க்கும் அரும்பிலும்
விரிந்த மலரிலும்
துளிரிலும் நிறம் மாறிய
தளிரிலும் இருப்பது நீயா?
வானத்தில் ஒளிரும்

வண்ணை நிலவும் ஆதவனும்
கண்சிமிட்டும் தாரகைகளும்
மலைமுகட்டில் தூங்கும்
மஞ்சுப் பொதியும்
பொழிகின்ற அருவியும்
புதுப்புனலும் நுரையும்
பூந்தென்றல் காற்றும் நீயா?
பாலருந்தி மகிழ்ந்திருக்கும்
பாலகனின் குமிழ்ச்சிரிப்பில்
பொலிந்திருப்பது நீயா?
அன்புமதலை சீருடை
முதன்முதலாய் அணிந்து
அழகுநடைபயில்வது
கண்டு மகிழ்கின்ற
அன்னையின் சிரிப்பில் நீயா?
வியர்வை வழிந்தோட
அயர்வின்றி உழைத்துக்
கிடைத்த கூலியுடன்
வீடடைந்து நீராடி
மனைவி மக்கள் முகம்பார்த்து
புனைவின்றி புன்னகைத்து
உண்ணுகின்ற சோற்றுக்
கவளத்தில் நீயா?
காலடியில் விளையாடி
மடிமுட்டி நிற்கும்
சேயினை நாவினால்
தடவிநிற்கும் பசுவின்
கண்ணிமையில் நீயா?
வெட்டுப்பட போவதறியாமல்
ஆட்டுக்கிடா தன்கழுத்திலிட்ட
மாலையினைத் தின்னுகின்ற
வேளையில் அதன்கண்களில்
தெரிகின்ற பாவனையும் நீயா?

புனல் காற்றிலும் அலைவீச்சிலும்
திகழ் ஒளியிலும் இருளிலும்
வெளியிலும் எம்மிதயத்திலும்
பொங்கி வழிகின்றாய் இறைவா!
முன்னகர்ந்தும் பின்னகர்ந்தும்
எத்திசை நோக்கினும்
அத்திசை அத்திசை
பார்க்குமிடமெங்கும் நீக்கமற
நிறைந்திருக்கும் தேவே!
பார்த்துன்னை உணரும் அறிவொன்றே
போதுமென்று இருகரமேந்தி
நான் யாசிக்கிறேன் இறைவா!
யாசிக்கிறேன் உன்னை.

- கவிஞர் மனோன்மணி மாணிக்கவாசகம்
சென்னை



## திருமண மாலை

மறுமணத்திற்கு மாப்பிள்ளை தேவை :

பண்ணைக்கூட்டம், 29 வயது, MCA படிப்பு, 5'1' சிவப்பு நிறம், விசாகம், செவ்வாய் இல்லை, ஒரே பெண் சாப்ட்வேர் இன்ஜினியர், சென்னை, தந்தை வழக்கறிஞர், பூர்வீகம் நாமக்கல், மறுமணத்திற்கு தகுதியான சாப்ட்வேர் இன்ஜினியர் தேவை.

மணமகள் தேவை :

விழியன் குலம், வயது 29, B.Tech., MS., 6'1'', சிவப்பு, திருவோணம், செவ்வாய் இல்லை, 2 சகோதரிகள், சென்னையில் தந்தையுடன் சொந்தத் தொழில் – நல்ல வசதி, பூர்வீகம், ராசீபுரம், சென்னையில் உள்ள நல்ல தொழில் குடும்பத்திற்கு முன்னுரிமை. படித்த, தகுதியான பெண் தேவை.

மணமகள் தேவை :

காடை கூட்டம், 30 வயது, 5'11'' சிகப்பு, சுவாதி, செவ்வாய் இல்லை, 1 சகோதரி, தந்தை சென்னையில் தனியார் நிறுவனத்தில் உயர் அதிகாரி பூர்வீகம், ஒட்டன் சத்திரம், சென்னையில் சாப்ட்வேர் இஞ்சினியராக உள்ள வரனுக்கு இஞ்சினியர் பெண் தேவை.

தொடர்புக்கு
டி.கே.சுப்ரமணியன்,
60, மேகசின் சாலை (பட் ரோடு),
பரங்கிமலை, சென்னை 600 016
தொ.பே. : 044-22311411, 98403 64348

❖❖❖❖

# மணமகள் தேவை

| | | |
|---|---|---|
| பெயர் | : | M.C.ரமேஷ்குமார் B.E., (ECE)S/W Engineer, USA |
| பிறந்த தேதி | : | 24-02-1981,<br>ரௌத்ரி மாசிமாதம் 13, செவ்வாய்கிழமை |
| பிறந்த ஊர் / நேரம் | : | ஈரோடு, 11.55 a.m. |
| ஜென்ம நட்சத்திரம் | : | சுவாதி 2ம் பாதம் துலா இராசி |
| ஜென்ம இலக்னம் | : | ரிஷபம் |
| சொந்த ஊர் | : | மஞ்சக்காட்டுவலசு, மொடக்குறிச்சி |
| தந்தை / தாயார் | : | M.N.சின்னசாமி B.Sc., C.மீனாட்சி<br>3/1, M.P.இல்லம் D.No.5<br>எஸ்.கே.சி.ரோடு, முதல் தெரு,<br>சுனாம்பட்டி நால்ரோடு,<br>ஈரோடு - 638 009<br>போன் : 0424-2272390, 9443094707 |
| உடன் பிறந்தோர் | : | அக்கா 1, திருமணம் ஆனவர் |
| பையன் உயரம் | : | 5'9" |
| குலம் | : | தூரன் |

| | | | |
|---|---|---|---|
| | | லக்னம் | |
| சூ<br>சுக்ரன்<br>செவ்வாய் | இராசி | | ராகு |
| புதன்<br>கேது | | | |
| | | சந்திரன் | குரு<br>சனி |

| | | | |
|---|---|---|---|
| லக் | லக்னம்<br>செவ்வாய் | குரு,சனி<br>கேது | |
| | அம்சம் | | |
| சூரியன்<br>சந்திரன் | | | |
| | ராகு | சுக்ரன் | புதன் |

ஜெனன காலம் இராகு திசை இருப்பு 11 வருடம் 1 மாதம் 20 நாள்

நடப்பு திசை, சனி திசை, சனி புத்தி 13-04-2008 to 16-04-2011

மணமகள் எதிர்பார்ப்பு கல்வி தகுதி B.E., B.Tech., MCA

❖❖❖❖

# வானம் தொடலாம் வாங்க

– சிந்தனைக் கவிஞர் கவிதாசன்

**எப்பொழுது பார்த்தாலும், யாரைப் பார்த்தாலும் நன்றாகப் படி, படி என்கிறார்களே?**

"கல்வியின் வழியே ஞானஒளி பெற்று சாதாரண மனிதனும் உன்னத நிலையை அடைந்து புனிதனாகலாம்" என்றார் சுவாமி விவேகானந்தர். படிக்கின்ற காலம் பொற்காலம்; பண்பையும் அறிவையும் வளர்க்கும் நற்காலம். ஆகவே படிப்பதற்குக் கிடைக்கும் அரிய வாய்ப்பை நன்கு பயன்படுத்தி முன்னேறியவர்கள் ஏராளம் ! ஏராளம் !

ஆகவேதான், உங்களுடைய எதிர்காலம் பொற்காலமாக அமைய வேண்டும் என்பதற்காக உங்களுடைய வளர்ச்சியின்மீது அக்கறை கொண்ட பெற்றோர்களும், ஆசியர்களும் "நன்றாகப் படி, நன்றாகப்படி" என்கிறார்கள். அவர்கள் அவ்வாறு சொல்வது உங்களுக்கு இப்பொழுது கசப்பாகத் தெரியலாம். அதன் இனிப்பு பின்னர்தான் தெரியும். நோய் தீர்க்கும் மருந்து கசப்பாக இருக்கின்றது என்று விட்டு விடலாமா?

கல்வியின் வேர்கள் கசப்பானவை. ஆனால் அதன் கனிகள் இனிப்பானவை. கல்விதான் ஒருவருடைய வாழ்க்கையை வளமாக்கும் செல்வம். கல்வி இருந்தால் உயர்ந்த பதவிகளை அடைந்து அதன்மூலம் சிறந்த சேவைகளைச் செய்து மக்கள் மனதில் என்றென்றும் வாழும் சாகா வரம் பெறலாம். மேலும் படிப்பது என்பது ஒரு இலக்கல்ல, அது ஓர் அறிவுப் பயணம்.

**திறமையும் ஆர்வமும் இருந்தும் எனது முயற்சிகள் வெற்றியடைவதில்லையே, ஏன்?**

ஒரு செயலில் வெற்றியடைவதற்கு ஆர்வம், திறமை, முயற்சி ஆகிய மூன்றும் மிகவும் அவசியம். ஆனால் எல்லா முயற்சிகளும் வெற்றியடையும் என்று எதிர்பார்க்கக் கூடாது.

ஒரு பெரிய மாமரத்தைப் பாருங்கள், அது எத்தனை ஆயிரம் பூக்களை விடுகின்றது. ஆனால் அத்துணை பூக்களும் பிஞ்சுகளாக மாறுவதில்லை, பிஞ்சுகள் அத்துணையும் காயாக மாறுவதில்லை. காய்கள் அத்துணையும் கனிவதில்லை, அதுபோலதான் உங்களுடைய முயற்சிகளில் சில பூக்களாகவே உதிர்ந்து விடக்கூடும். சில முயற்சிகள் காய்களாலாம். சில முயற்சிகள் மட்டுமே கனியாகும். அதற்காக மனம் தளர வேண்டாம்.

ஒவ்வொரு முயற்சியும் ஒரு புத்துணர்வைக் கொடுக்கின்றது. ஒவ்வொரு தோல்வியும் ஒரு பாடத்தைக் கொடுக்கின்றது. முடிந்தவரை முயற்சிப்பதே நல்ல முயற்சி. தொடர்ந்து முயலுங்கள்; வெல்ல முடியும். கல்லை உடைப்பவன் பத்து முறை அடித்தாலும் அக்கல் உறுதியாக ஒரு விரிசலும் காட்டாமல் இருக்கும். 11வது அடியில் அது இரண்டாகப்

பிளந்து விடுகிறது. அந்த 11வது அடிதான் சாதித்தது என்று சொல்ல முடியுமா? முன்னர் கொடுத்த 10 அடிகளும் தனது பங்கை ஆற்றின அல்லவா? தொடர் முயற்சிக்கு வாழ்க்கையில் வெற்றி நிச்சயம் கிடைக்கும். புத்துணர்வோடு முயலுங்கள்! புதுமைகள் படைத்து வெல்லுங்கள்.

**வெற்றி பெறுவதற்கு எவ்வளவு காலம் பொறுத்திருக்க வேண்டும்**?

எவ்வாறு ஒரு உயிரினம் பிறப்பதற்குக் கர்ப்பகாலம் இருக்கின்றேதா, அது போல ஒவ்வொரு வெற்றிக்கும் ஒரு கர்ப்ப காலம் இருக்கின்றது. அந்தக் கர்ப்ப காலத்தின் அளவு, நீங்கள் அடைய நினைக்கும் வெற்றியைப் பொறுத்தது.

விதையை விதைத்த அடுத்த நாளே விளைச்சலை எதிர்பார்க்க முடியுமா? நிலத்தில் நெற்பயிரை விளைத்தெடுக்க வேண்டுமென்றால் குறைந்தது நான்கு மாதங்கள் பொறுமையாகக் காத்திருக்க வேண்டும். வாழை என்றால் சுமார் ஒரு வருடம், கரும்பு என்றால் 14 மாதங்கள் எனப் பொறுமையாகக் காத்திருப்பதோடு தேவையான உழைப்பையும் கொடுக்க வேண்டும். மரம் வளர்ப்பு என்றால் பல ஆண்டுகள் பொறுமையும் உழைப்பும் வேண்டும். ஆகவே, நிலையான வெற்றியைப் பெற விரும்புகின்றவர்கள் தொடர்ந்து உழைத்துக்கொண்டே பொறுமையைக் கடைபிடிக்க வேண்டும். இந்த இயற்கையின் விதியை உணர்ந்து கொண்டு மதி வழி உழைத்தால் மாபெறும் சாதனை படைத்திடலாம் !

❖❖❖❖


## உடல்நலத்தோடு செழிக்கட்டும் கொங்கு சமுதாயம்

### பெருகட்டும் வியாபாரம்

மனித குலத்திற்கு எவ்வித நோய்கள் வராமல் தவிர்க்கும் அற்புத உணவு, உணவு மூலமாக இரத்தத்தைச் சுத்தப்படுத்துதல், உணவு மூலமாக இரத்தத்தைச் சமநிலைப்படுத்துதல், உணவு மூலமாக இரத்தத்தைச் சீராக இயங்கத் தூண்டிவிடுதல், உடல் நலத்தை மிகவும் பாதுகாப்பாக வைத்திருத்தல் ஆகியவற்றிற்காகவும் உலகத்தரம் வாய்ந்த உணவுப்பொருட்களின் மூலமாக உடல் ஆரோக்கியமாக வாழ்ந்து பணம் சம்பாதிக்கவும் கொங்கு நண்பர்களாகிய எங்களை அணுகவும்.

**V.HARRIDASS, PHONE : 26222425**
**N.RAVI CHANDRAN CELL : 9840557753**


❖❖❖❖

# ஆய்வு

பழங்குடிகள் என்றாலே நாகரிகம் இல்லாதவர்கள், படிப்பறிவு இல்லாதவர்கள், எதைப்பற்றியும் கவலைப்படமாட்டார்கள் என்ற எண்ணம்தான் பொதுவாக நம்மிடையே மேலோங்கி இருக்கிறது. ஆனால் நிஜத்தில் பழங்குடிகள் அப்படியெல்லாம் இல்லை. அவர்களிடம் கற்றுக்கொள்வதற்கு நமக்கு நிறைய விஷயங்கள் இருக்கின்றன என்கிறார் ஹரி சரவணன்.

தேசிய நாட்டுபுற ஆய்வு மையத்தின் ஆவணப்பதிவிற்காக இந்தியாவின் பல பகுதிகளிலும் வாழும் பழங்குடியினர், நாடோடிகள், தலித் சமூகத்தினரின் பேச்சையும், பாடல்களையும் பதிவு செய்திருக்கிறார் ஹரி சரவணன். பழங்குடியினரின் ஓவியங்களையும் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறார். தற்போது ஒரு தனியார் சுற்றுலா நிறுவனத்துடன் இணைந்து சுற்றுலாவைக்கொண்டு பழங்குடியினரின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான திட்டங்களை உருவாக்கி வருகிறார்.

இவர் பழங்குடியினரைச் சந்திப்பதற்காக பெரும்பாலும் தன்னுடைய மோட்டர் சைக்கிளிலேயே பயணங்களை மேற்கொள்வது வழக்கம். அவர் பழங்குடி சமூகத்தினரைக் குறித்து நம்முடன் பேசியதிலிருந்து...,

பழங்குடியினரைச் சந்திப்பதற்காக நீங்கள் தொடர் பயணங்களில் ஈடுபடுவதற்குக் காரணமாக அமைந்த விஷயம் எது?

நான் மும்பையில் பிறந்து வளர்ந்தாலும் என்னுடைய பூர்வீகம் பொள்ளாச்சிக்குப் பக்கத்தில் இருக்கும் ஒரு கிராமம்தான். நகர வாழ்க்கையிலிருந்து கிராமத்து வாழ்க்கைக்குச் செல்கிறபோது இனம் புரியாத பரவசமும் நிறையக் கேள்விகளும் எனக்குள் ஏற்படும். அப்போது எனக்கு 12 அல்லது 13 வயது இருக்கும். பள்ளி சார்பாகவும் பெற்றோர்களுடனும் நான் மேற்கொண்ட சுற்றுலாப் பயணங்கள்தான் பிற்காலத்தில் என்னை ஒரு தேடலுடன் கூடிய சுற்றுலாப்பயணியாக்கியிருக்கிறது என்று நினைக்கிறேன்.

அதன்பின் என்னுடைய கல்லூரி வாழ்க்கையில் பேராசிரியர் நிர்மல் செல்வமணி மூலம் தொல்காப்பியமும் பத்துப்பாட்டும் எனக்கு அறிமுகமாயின. இந்த நூல்களை நான் ஆங்கிலத்தில்தான் படித்தேன். தொல்காப்பியத்தில் உள்ள ஐந்து திணைகளையும் படித்தபோதுதான், எனக்குப் பயணத்தின் மீது மிகப்பெரிய ஈர்ப்பு ஏற்பட்டது. பயணத்தின் போது நான் சந்திக்கும் ஒவ்வொரு மனிதர்களிடமிருந்தும் நான் ஏதாவது

கற்றுக்கொள்கிறேன். இந்த அனுபவம்தான் என் தொடர் பயணங்களுக்குக் காரணமாக அமைகின்றன.

எந்தெந்தப் பகுதிகளில் பயணம் செய்துள்ளீர்கள்?

2004 முதல் 2007 வரை குறிப்பிட்ட இந்தியப் பகுதிகளில் தேசிய நாட்டுப்புற ஆய்வு மையத்திற்காக நானும், நண்பர் ரெங்கையா முருகனும் பயணம் செய்து கதைப்பாடல்களைத் தொகுத்தோம்.

இந்தக் கதைப்பாடல்கள் வெறும் பொழுது போக்கிற்காகவோ, சடங்கிற்காகவோ பாடப்படுவதில்லை. இந்தப் பாடல்கள் அந்தச் சமுதாயத்திற்கான அடையாளம். தென் ஆந்திராவில் உள்ள ஆனந்தபூர் மாவட்டத்தில் 'மாளா' என்ற தலித் சமூகத்தினர் உருமி மேளம் அடித்துச்சொல்லும் அக்கமார் கதைகளும், ஒரிசா மாநிலத்தில் 'கோண்டு' சமூகத்தினரிடம் உள்ள பாடல்களும், அசாமில் 'பட்டிராவா' என்ற பழங்குடியினர் பாடும் மனசா தேவி கதைப்பாடல்களும், அருணாசலப்பிரதேசத்தில் மின்யோங் ஆதி பழங்குடியினர் பாடும் 'டோனி போலோ' என்ற கதைப்பாடலும், கர்நாடகத்தில் நாடோடி சமூகத்தினரின் 'மயிலார்லிங்கா' என்ற கதைப்பாடலும், ராஜஸ்தானில் சூபிபாடல் பாடும் 'மங்குனியர் லங்கா' என்கிற நாடோடி பாடல்களும் அஜ்மீர் தர்காவில் உள்ள சிஸ்டி என்ற சமூகத்தில் பாடும் சூபி பாடல்களும், தென் குஜராத்தில் டாங்கு பகுதில் உள்ள குக்தரா பழங்குடியினரின் இராமாயணம் ஆகியவைகளை இந்தப்பயணங்களின் போது சேர்த்தோம்.

குக்தரா பழங்குடியினர் இராமாயணத்தில் இராமனும் இராவணனும் சந்தித்துக்கொள்வார்கள். இருவரும். சேர்ந்து 'சாய்' குடிப்பார்கள். அந்த அரண்மனையில் உள்ள கைகேயியும் சீதாவும் சாதாரணப் பெண்களைப் போல விறகு பொறுக்கியெடுத்துச் சமைப்பார்கள்.

வெவ்வேறு விதமான பழங்குடியினரிடம் காணப்படும் ஒற்றுமை என்ன?

ஒற்றுமையான விஷயம் என்றால் அதிதி தேவோ பவாதான் ! இதற்கு அர்த்தம், விருந்தினர்கள்தான் கடவுள் என்பதாகும். இதைத்தான் இந்திய சுற்றுலாத் துறையும் சொல்கிறது. இவை நகரம் சார்ந்த நாகரிகம் இல்லை. இது பழங்குடியினரின் நாகரிகம். சுற்றுச்சூழலைப் பாதுகாக்க இன்று அரசாங்கம் மிகப் பெரிய பிரச்சாரங்களைத் துவக்கியுள்ளது. ஆனால் இந்த விருந்தோம்பல் மரபும், சுற்றுச் சூழல் பற்றிய தெளிவும் பழங்குடியினரின் வாழ்க்கை இயல்பிலேயே இருக்கின்றன. இந்த விருந்தோம்பல் மரபும், சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் மரபும் எல்லாப் பழங்குடியினரிடமும் ஒன்றாக பார்க்க முடிந்தது.

பொதுவாக பழங்குடியினரின் வாழ்க்கை முறையை மாற்ற வேண்டும் என்ற கருத்து நிலவுகிறது..

நமது சினிமாவில் காட்டப்படும் நிலையில் தழைகளைக் கட்டிக்கொண்டு பழங்குடியினர் இல்லை. அதேநேரம் செல்போன் மீது அவர்களுக்கு ஆசை இல்லாமல் இல்லை. பழங்குடியினர் வாழ்வியலோடு இணைந்து அவர்களை மேம்படுத்த வேண்டும்.

அவர்கள் விவசாயம் செய்யும் முறையே வேறு. ஒருமலைப்பகுதியில் எட்டு முகங்கள் இருக்கும் என்பார்கள். அதில் ஒரு முகப்பகுதியில் உள்ள மாங்கள், செடி, கொடிகளை எடுத்து விடுவார்கள். ஆனால் அதை அடுப்பு எரிப்பதற்குப் பயன்படுத்த மாட்டார்கள். அந்தப்பகுதியில் விவசாயம் செய்வார்கள். இப்படி ஒவ்வொரு முகமாக விவசாயம் செய்து கடைசியாக முதல் முகத்திற்கு வரும்போது பழைய மாதிரி மரம், செடி, கொடிகள் மண்டிக்கிடக்கும்.

நாம் ஓர் இடத்தையோ, வயலையோ வாங்கினால் அதைப்பற்றி மட்டுமே பார்ப்போம். அடுத்த இடத்தைப்பற்றி கவலைப்பட மாட்டோம். ஆனால் அவர்கள் காடு முழுவதும் நம்முடையது என்ற நினைப்பார்கள். உணவு எது கிடைத்தாலும் சமமாகப் பங்கிட்டுப் பிரித்துக் கொள்வார்கள்.

தென் இந்தியாவில் எந்தெந்த இடத்திற்குச் சென்றிருக்கிறீர்கள்?

கேரளாவில் பயணம் செய்தது குறைவு. எனது சொந்த மாவட்டமான கோவை மாவட்டத்தில் உள்ள அண்ணமார் சாமி கதையை இன்னும் பதிவு செய்ய முடியவில்லை. அது ஒரு குறையாகவே எனக்கு இருக்கிறது. தமிழ்நாட்டில் இருளர்களைப் பற்றியும் ஆய்வு செய்துள்ளேன். தமிழ்நாட்டில் கோவில் சார்ந்த பயணங்களை மேற்கொண்டேன். அப்போது கோவில் சார்ந்த இலக்கியக் குறிப்புகளும், ஸ்தல புராணங்களும், அது சார்ந்த நாட்டுபுறப் பாடல்களையும் உடன் வைத்துக்கொண்டேன் அதனால் அந்தப் பயணம் வரலாற்றோடு அமைந்தது.

**V.HARI SARAVANAN S/o. G. VISWANATHAN (Member, KNS)**

(நன்றி : தினமணி கதிர் 11-04-2010)

❖❖❖❖

(குறிப்பு : திரு. ஹரி சரவணன் அவர்களின் அரிய முயற்சிக்கு சங்கம் வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறது)

# வாழ்த்துகிறோம்



திரு. G.இராமசாமி CA, கோவை
(Vice President, Institute of Chartered Accountants of India

கோவை மாவட்டம் உருமாண்டம்பாளையம் என்ற கிராமத்தில் திரு. கணபதி கவுண்டர், திருமதி பொன்னம்மாள் தம்பதியருக்கு 1954 ஆம் ஆண்டு பிறந்தார்.

ஆதி கூட்டத்தைச் சேர்ந்த திரு. G.இராமசாமி அவர்கள் உலகத்தில் இரண்டாவது மிகப்பெரிய நிறுவனமாகிய அகில இந்திய பட்டைய கணக்காளர்கள் நிறுவனத்தின் (பாராளுமன்றத்தால் வரையறுக்கப்பட்டது – The Institute of Chartered Accountants of India) உதவித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

அடுத்த ஆண்டு இந்திய அளவில் நிறுவனத்தின் தலைவராக பொறுப்பேற்க உள்ளார். கொங்கு மண்டலத்தைச் சேர்ந்த ஒருவர் இப்பதவிக்கு வருவது இதுவே முதன்முறை.

நமது இனத்தைச் சார்ந்தவர் இந்திய அளவில் உயர் பதவியை அடைவது நமக்கெல்லாம் பெருமையைச் சேர்க்கிறது.

இவரது மனைவி திருமதி தீபாஇராமசாமி. இவர்களுக்கு பிரகலாத் என்ற மகன் உள்ளார். அவர் தற்போது 10 ஆம் வகுப்பு படித்து வருகிறார்.

திரு. G.இராமசாமி அவர்கள் புதிய பதவியில் சிறப்பாகச் செயல்பட்டு சாதனைகள் பல படைக்க கொங்கு நண்பர்கள் சங்கம் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

❖❖❖❖

# அமராவதி நீர்ப்பாசன விவசாயிகள் சங்கம்

பாம்பாற்றிலிருந்து கேரளத்துக்கு 3 டி.எம்.சி. நீர் ! காவிரி நடுவர் மன்றத் தீர்ப்புக்கு அமராவதி விவசாயிகள் எதிர்ப்பு !

கொடுப்பதற்கு கோவை ! பெறுவதற்கு கும்பகோணமா ? நடுவர் மன்றத் தீர்ப்பை மறு பரிசீலனைக்கு உட்படுத்து !

The Cauvery tribunal’s final verdict removes the dis-satisfaction, but does not satisfy the people of Tamilnadu.

அன்பார்ந்த அமராவதி விவசாயப் பெருமக்களே ! பொதுமக்களே !

வணக்கம், 16 வருடங்கள், 11 முதலமைச்சர்கள், பல்வேறு வழக்குகள், பேச்சுவார்த்தைகள் என்ற நிலையில் கடந்த 5-2-2007 ல் காவிரி நதிநீர் ஆணையம் தனது இறுதித் தீர்ப்பைத் தந்துள்ளன.

| | |
|---|---|
| தமிழ்நாட்டிற்கு | 192 டி.எம்.சி |
| புதுச்சேரிக்கு | 7 டி.எம்.சி |
| கேரளாவுக்கு | 30 டி.எம்.சி |
| இதில் (கர்நாடகா) கபினியில் இருந்து | 21 டி.எம்.சி |
| பவானியில் இருந்து | 6 டி.எம்.சி |
| (அமாவதி பாம்பாறிலிருந்து | 3 டி.எம்.சி |

என மொத்தம் 30 டி.எம்.சியை கேரளாவுக்குக் கொடுக்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளது.

பாம்பாறு, மறையூர் கோவில்கடவு பகுதியில் இருந்து தேனாற்றுடன் கலந்து, சின்னாறுடன் அமராவதி அணைக்கு வருகிறது. அமராவதி அணையின் கொள்ளளவு 4 டி.எம்.சி. ஆகும். 1 டி.எம்சி. நீரைக்கொண்டு 10,000 ஏக்கரில் ஒருபோகம் நெல் பயிரிடலாம். அமராவதி பிரதானக் கால்வாய் மூலம் 30,000 ஏக்கரில் ஒரு போகமும், ஆற்றுப் பாசனத்தில் 30,000 ஏக்கரில் இரு போகமும், தாராபுரத்திற்கும், சின்னத் தாராபுரத்திற்கும் இடையே உள்ள 35 கி.மீ. அமராவதி ஆற்றில் உள்ள 5000 பம்ப் செட் மூலம் 30,000 ஏக்கரில் ஒரு போகமும் பாசனம் நடைபெறுகிறது. கரையோரக் கிராமங்களுக்கு எண்ணற்ற கூட்டுக்குடிநீர்த் திட்டங்கள் உள்ளன. குளூகோஸ். டெரா-ஜெயின், சர்க்கரை ஆலை, காகித ஆலைகளுக்கும் ஏராளமாக தண்ணீர் எடுக்கப்படுகிறது.

குதிரையாறு, பாலாறு - பொருந்தலாறு, உப்பாறு, குடகனாறு, வட்டமலையாறு போன்ற உப நதிகளில் சிறு, சிறு அணைகளைக் கட்டித் தடுத்துவிட்டதால், கரூர் போன்ற கடை மடைப் பாசனம் அமராவதி அணையை நம்பித்தான் உள்ளது.

ஆக ஆண்டு ஒன்றுக்கு குறைந்தபட்சம் 12 டி.எம்.சி. நீர் தேவை, ஆனால், சராசரியாக 7 டி.எம்.சி. நீர்தான் அணைக்கு வருகிறது. நட்ட நெற்பயிர்கள் பால் பிடிக்கும் போது கருகி உள்ளன.

ஆக, இந்த வேதனையில் இருந்து மீள, அமராவதி அணைக்கு மேல் தூவானத்தில் நீரைத் தேக்க, அப்பர் அமராவதி திட்டமும், மூணாற்றைத் தடுத்து கேரளா மின்சாரம் எடுத்தபின்பு வீணாகும் நீரை அமராவதி அணைக்குக் கொண்டுவரும் மூணாறு திட்டத்தையும் நிறைவேற்ற வேண்டும் என்று நாம் கேட்கும்போது நம்மிடத்திலிருந்து 3 டி.எம்.சி. நீரை கேரளா கேட்பது என்பது, பிரச்சனையை திசை திருப்பும் உள்நோக்கம் கொண்டதாகும்.

பாண்டியாறு, புன்னம்புழா மற்றும் அவிநாசி அத்திக்கடவு திட்டத்தை முறியடிக்கவே பவானியிலிருந்து 6 டி.எ.சியை கேரளா கேட்கிறது.

| | |
|---|---|
| ஒரிசா மகாநதியில் | 2000 டி.எம்.சி. யும் |
| கோதாவரியில் | 1500 டி.எம்.சியும் |
| கிருஷ்ணாநதியில் | 800 டி.எம்.சியும் |

கேரளா ஆறுகளில் தேவை போக 1650 டி.எம்சி.யும் வீணாவதைப்பற்றி இதுவரை எந்தப் பட்ஜெட்டாவது குறிப்பிட்டதுண்டா?

பாம்பாற்றிலிருந்து 3 டி.எம்.சி நீர் கேரளாவுக்கு என்பது இருதரப்பு ஒப்பந்தம் அல்ல- பேசித் தீர்ப்பதற்கு! மாறாக உச்ச நீதிமன்ற இறுதித் தீர்ப்பு ! !

ஆக, உச்ச நீதிமன்ற இறுதித் தீர்ப்பை வரவேற்கும் அதேவேளையில், அதில் உள்ள சிறு குறைபாடுகளைக் களைய குறிப்பிட்ட மூன்று மாத கால அவகாசத்துக்குள் மேல் முறையீடு செய்ய தமிழக அரசு ஆவன செய்யவேண்டும். ஆகவே, கீழ்க்கண்ட நமது கோரிக்கைகளை வலியுறுத்தி, விவசாயிகளைத் திரட்டி இயக்கம் நடத்திட நமது சங்கம் முடிவெடுத்துள்ளது.

1. காவிரி நீர்ப்பிரச்சனை சம்பந்தமான அனைத்துக்கட்சி கூட்டங்களில் அமராவதி பாசன விவசாய சங்கங்களின் பிரதிநிதிகளுக்கு இடமளிக்க வேண்டும்.
2. அமராவதி அணை உடனே தூர்வாரப்பட வேண்டும்.

3. லோக்கலைசேசன் மூலம் அமராவதிப்பாசனததில் 3000 ஏக்கர் கரும்பு பயிரிட அனுமதி இதுவரை இருந்தது. அதை நடுவர் மன்றம் ரத்து செய்துள்ளதை ரத்து செய்து, அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையைக் காப்பாற்ற வேண்டும். மூணாறு திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்.

4. அப்பர் அமராவதி - மூணாறு திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்.

5. கேரளாவுக்கு, பாம்பாறிலிருந்து 3 டி.எம்.சி. நீர் என்பதை ரத்து செய்ய மேல் முறையீடு செய்ய வேண்டும்.

6. அமராவதி புதிய பிரதானக் கால்வாய் பாசனப் பகுதிகளுக்கு ஆகஸ்ட் 1 முதல் ஜனவரி 31 வரை 6 மாத காலத்திற்கு தொடர்ந்து இடைவெளியின்றி நீர் வழங்கவேண்டும் என்ற அரசாங்க ஆணையை உதறிவிட்டு, பி.ஏ.பி. யைக் காப்பியடித்து 85 நாட்களுக்கு மட்டும் நீர் வழங்குவது ஏன் ?

7. பி.ஏ.பி.யில் பாசனக் கால்வாய் சங்கங்கள், உயர்மட்டக்குழு செயல்படும்போது, அமராவதி பாசன சங்கங்கள் சாகடிக்கப்பட்டது ஏன்?

8. அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையின் எரிசாராயக் கழிவு நீரால், அதையொட்டியுள்ள போத்தநாயக்கனூர், நீலம்பூர் பகுதிகளில் பல கிராமங்களில் கிணற்று நீர் சிவப்பாக மாறிவிட்டது. குடிநீர் மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் ஏன் முறையாகச் செயல்படவில்லை?

9. அமராவதி ஆற்றில் அனுமதியின்றி மணல் எடுப்பதைத் தடுத்து, நிலத்தடி நீரைக் காப்பாற்ற வேண்டும்.

10. அமராவதி ஆற்றில் இடது கரை, வலது கரை பாசன 25 வாய்க்கால்களை (உடுமலை- 8, தாராபுரம் - 4, கரூர் - 13) நவீன முறையில் சீரமைக்க வேண்டும்.

மேற்கண்ட கோரிக்கைகளை நிறைவேற்றிட அமராவதி நீர்ப்பாசன விவசாயிகள் அனைவரும் ஓரணியில் திரளுமாறும், சங்க நடவடிக்கைகளில் பெருந்திரளாகக் கலந்துகொண்டு பேராதரவு தருமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

ஒன்றுபடுவோம் ! வெற்றி பெறுவோம் !!

தலைவர் ப.செல்லமுத்து
பெருமாள்புதூர்

❖❖❖❖